[11th August 1965

மத்திய சிறைக்கைதிகளின் உடுப்புகள்

* 223 கேள்வி—திரு. ஆர். தங்கவேலு : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மத்திய சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கு விடுதலையான கைதிகளால் அணியப்பட்ட உடுப்புகள் கொடுக்கப்படுவது உண்மையா ?

கனம் திரு. கோ. பூவராகன் : மத்திய சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு விடுதலையான கைதிகளால் அணியப்பட்ட உடுப்புகள் அதே நிலையில் மற்ற கைதிகளுக்கு கொடுக்கப்படுவது இல்லை.

திரு. ஆ. தங்கவேலு : கனம் தலைவர் அவர்களே, ஏற்கனவே முன்பு ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, பழைய உடுப்புக்களை சுத்தம் செய்து கொடுப்பதாக சொன்னார்கள். ஒருவர் அணிந்த உடையை இன்னொருவர் அணிவது என்பது மிகவும் சுகாதாரக்கேடான காரியம். அதிலும் மத்திய சிறையில் தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் அதிகமாக இருப்பதால் இம் மாதிரி சுத்தம் செய்து கொடுத்தாலும் மிகவும் சுகாதாரக் கேடான நிலை இருக்கிறது. வேறு புதிதாக உடுப்புக்களை கொடுப்பதில் அரசாங்கத்திற்கு என்ன அதிகமாக செலவாகிவிடப் போகிறது ? இவர்கள் அரசாங்கத்திற்கு வருமானத்தையும் தேடி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இவர்களுக்கு புதிய உடுப்புக்களை கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : குறுகிய கால கைதிகளுக்குக் கொடுக்கப்படும் நல்ல உடைகளைத் திரும்பவும் உபயோகிக்க வேண்டும் என்ற முறையில்தான், அவற்றை சுத்தம் செய்து திரும்பவும் பயன்படுத்துகிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : இன்றைக்கு மத்திய சிறைச்சாலைகளில் ஸி-வகுப்பு கைதிகளுக்கு கொடுக்கப்படும் உடை மிகவும் பயங்கரமாக இருக்கிறது. ஒரு துண்டும், கையில்லாத பனியனும் —அதாவது அரை நிர்வாணமாக இருக்கக்கூடிய வகையில் உடை இருக்கிறது. கடும் குளிரில் இவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்பேர்ப்பட்ட கைதிகளை இதிலிருந்து காப்பாற்றுவதற்கு சர்க்கார் இந்த உடைகளை மாற்றுவதற்கு பரிசீலனை செய்ய முன் வருமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : சிறையில் எப்படி கைதிகளை பாதுகாக்கவேண்டுமோ அந்த முறையில் பாதுகாத்துக்கொண்டு வருகிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற குறைகள் பற்றியவிவரம் என்னுடைய பார்வைக்கு வந்ததாக தெரியவில்லை.